**தலைப்பு 304 – வளி மண்டலவியல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வளி மண்டலத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வளி மண்டலவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வளி மண்டலவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**காசுப் பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வளி மண்டலவியல் திணைக்களத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முற்பணம் அறவீடு செய்தல் CIGAS பரிட்சை மீதியின் படி ரூபா 9,492,823 தொகை என கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், கணக்குக் கூற்று – SASO படி ரூபா 8,956,153 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, முற்பண அறவீடுகள் ரூபா 536,670 தொகை குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | CIGAS பரீட்சை மீதியின் படி சரியாக கணக்கீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | திணைக்கள புத்தகங்களின் படி கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **நிலையான சொத்துப் பதிவேடு** | | |
| | 1978 இன் திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை படி நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக தாமதம் அடைந்ததெனவும், விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | **பொறுப்புக்கள் பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 214 இற்கு இணங்க பொறுப்புக்கள் ஒழுங்காக பரிசோதனை மேற்கொள்ளக் கூடியவாறு பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | இந்த கணினி மென்பொருள் நாளதுவரை ஆக்கப்பட்டு நாளாந்தம் பேணப்படுவதுடன், தேவையெனில் அச்சிட இயலுமாக உள்ளது. | பொறுப்புக்கள் ஒழுங்காக பரிசோதனை செய்யக்கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேடு ஒன்றில் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான அனைத்து சீராக்கல்களும் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தேறிய ஏற்பாடுகள் ரூபா 395,100,000 தொகையாக இருந்ததுடன், மொத்தச் செலவு ரூபா 342,198,581 தொகை ஆக காணப்பட்டது. அதன் காரணமாக சேமிப்பு ரூபா 52,901,419 தொகை எனப்படும் மொத்த ஏற்பாடுகளின் 13.4 சதவீத ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் பார்த்தவாறு செலவுகள் ஏற்படாமை, பங்களிப்புத் தொகை செலுத்துவதற்குரிய இன்வொயிஸ்கள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாமை மற்றும் அரசாங்கச் செலவு மீளாய்விற்கான அமைச்சரவை பத்திரத்திற்கு இணங்க செயற்பட்டமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டது. | மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் செலவு முகாமைத்துவம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 36 மீண்டுவரும் செலவு விடயங்களிலும் 06 மூலதன விடயங்களிலும், 90 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | பதில் அனுப்பியிருக்கவில்லை. | திறைசேரி ஏற்பாடுகள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 06 செலவு விடயங்களில் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் 20 சதவீதம் முதல் 300 சதவீதம் வரையான ஏற்பாடுகள் ஏனைய செலவு விடயங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்தன. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் அந்த தேவையான மேலதிக ஏற்பாடுகள் ஏனைய செலவு விடயங்களில் இருந்து மாற்றப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டன. | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கொடுப்பனவு உறுதிப் பத்திரங்களின் படி 05 செலவு விடயங்களுக்கான பொறுப்புக்கள் ரூபா 155,702 தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 155,702 தொகை பெறுமதியான பொறுப்புக்கள் அத் திகதிக்கு முன்னர் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிப் பத்திரங்களுடன் தொடர்பாக பொறுப்புக்கள் ஆகும். அதன் காரணமாக அந்தப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த முடியாமல் போனது. | ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | நன்கொடைகள் மற்றும் பங்களிப்புத் தொகையின் கீழ் பிராந்திய ஒருங்கிணைந்த பல் அழிவு முன்னெச்சரிக்கை முறைமை (RIMES), சூராவளி தடுப்புப் பெனல் மற்றும் பயர்வோல் பங்களிப்புக்காக செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகைக்காக 2021 திசெம்பர் 31 திகதி அளவில் இன்வொயிஸ் பத்திரங்கள் கிடைத்திருக்காமையால் ரூபா 1,998,960 இற்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக இதுவரை பங்களிப்புத் தொகைக்காக கடந்த ஆண்டுகள் தொடர்பான நிலுவைத் தொகைக்காக விண்ணப்பித்தல் குறிப்பிட்ட நிறுவனத்தினால் விண்ணப்பித்திருக்காமையால் மேற்கூறிய பெறுமதி ஈடுபாட்டுப் பொறுப்பொன்றென நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. | ஆண்டிற்குரிய அனைத்துப் பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமில்லாத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | கூட்டுப் பெறுமதி ரூபா 87,398 இற்கான 08 காசோலைகள் வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்தும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | இதுவரையும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத மீதியாக உள்ள காசோலைகளுக்காக நி.பி. இன் பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | 06 மாதங்களை மிகைத்துள்ள காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 565(5) | மாதாந்த வைப்பு பொழிப்புக் கூற்றொன்று தொடர்ந்து வரும் மாதம் முடிவடைய முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாதாந்த வைப்புக்கள் கூற்று தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 570 | காலவதியாகிய வைப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலவதியாகிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (iv) நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 206,177 இற்கான தொகைக்கான வைப்புக்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியான வைப்புக்கள் இந்த ஆண்டிலேயே அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 26 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சொந்தமான 08 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 2.5 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிமித்தக் கட்டுநிதி வழங்கும் போது மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டு போதியளவு நிதித் தொகையொன்று மாத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், தேவைப்பாட்டினை மிகைத்து 12 சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், வழங்கப்பட்டிருந்த கட்டுநிதியில் 36 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்களும் ஏற்பட்டிருந்தது. | தேவையான சந்தர்ப்பங்களில் உரிய செலவு மதிப்பீடொன்று தயாரித்து முறையான அங்கீகாரத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டிருந்த முற்பணத் தொகை கணக்குப் பிரிவில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. எதிர்பார்த்தவாறு செலவுகள் ஏற்பட்டிருக்காமையால் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைக்கு ஏற்றளவு முற்பணங்கள் பெறல் மற்றும் தாமதம் இன்றி முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரச அலுவலர்களுக்கான முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல் | | |
| (i) | இறந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 274,448 இற்கான கடன் மீதி 2022 ஏப்ரல் அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கான கடிதம் ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து எங்களுக்கு கிடைத்திருக்காமையால் அந்த மீதி தீர்க்கமுடியாதுள்ளது. | உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 124,830 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்படின் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன் என அறிவிக்கின்றேன். | சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் கடன் மீதியை தாமதம் இன்றி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | ஓய்வு பெற்றுள்ள மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 249,032 இற்கான இடர் கடன் மீதி ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு செலுத்தல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளும் போது தீர்மானிக்கப்படும். | ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தாமதம் இன்றி அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த இயலுமை அபிவிருத்தி, வளி மண்டலவியல் உபகரணங்கள் கொள்வனவு செய்தல், கட்டிடங்கள் மீளமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், மூலதனச் சொத்துக்கள் உரித்தாக்கல் மற்றும் டொப்லர் ரேடார் முறைமையின் அலுவல்கள் ஆகிய கருமங்களின் முன்னேற்றம் 10 சதவீதத்தை விட குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் ஊரடங்குச் சட்ட நிலைமை மீது திணைக்களம் சமர்ப்பித்திருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி குறிப்பிடப்பட்டுள்ள 05 கருமங்களின் முன்னேற்றம் 10 சதவீதத்தை விட குறைவாக இருந்தது. | ஏற்பாடுகளை பயன்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

### 3.3 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| டொப்லர் ரேடார் முறைமையின் அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12 மில்லியன் ஏற்பாடுகளில் இருந்து செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. 2021 ஆண்டின் போது வளி மண்டலவியல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 11 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 0.95 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், வளி மண்டலவியல் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி செய்தலின் கீழ் ரூபா 0.5 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஏற்பாடுகளில் 91 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. கட்டிட நிர்மாண வேலைக்காக ரூபா 10 | கேள்வி நடைமுறையின் படி தெரிவு செய்யப்பட்ட கம்பனியுடன் கூறுவிலைகள் தொடர்பாக கலந்துரையாடிய போது குறிப்பிட்ட வேலைக்காக ஒதுக்கப்பட்ட பணம் போதியளவாக காணப்படவில்லை என கண்டறியப்பட்டமையால் இந்த செயற்திட்டம் விதிக்கப்பட்டவாறு செயற்படுத்தப்படவில்லை. | ஏற்பாடுகளை பயன்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியனிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 0.39 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஏற்பாடுகளில் 96 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | | |

### 3.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் கொக்கல ரேடார் முறைமை ஒன்று நிருவுவதற்காக ரூபா 402.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கருமம் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட கருமத்திற்காக பெற்றுக்கொண்ட உபகரணங்களில் ரூபா 9.1 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் காணாமல் போயிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள், சேதங்கள் பதிவேட்டில் அப் பெறுமதி ரூபா 4.9 மில்லியன் தொகை என காட்டப்பட்டிருந்தது. அதேபோல் இந்த காணாமல் போனவை தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் கண்டிருக்கவில்லை. | பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் மீது தற்போது காணப்படும் பண்டங்கள் மற்றும் கோபுரங்களுடனான கட்டிடம் அதில் தங்கியிருக்கும் இராணுவ உத்தியோகத்தர்களுக்கு தற்காலிகமாக பயன்படுத்துவதற்காக சாட்டப்பட்டுள்ளது. | இந்த காணமல் போதல் மற்றும் தோல்வியடைந்த செயற்திட்டத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் காணல் மற்றும் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டின் போது மற்றும் அதற்கு முன்னைய வருடங்கள் முதல் வருடாந்த இருப்புக் கணிப்பீட்டின் போது இனங் காணப்பட்ட காலங்கடந்த மற்றும் அழிக்கப்பட வேண்டிய சேதமுற்ற பண்ட விடயங்கள் 135 தொகையை அப்புறப்படுத்துவதற்கு அல்லது கழிவுத்துண்டு பெறுமதிக்கு விற்பனை செய்வதற்கு வருமானம் ஒன்றை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் இது தொடர்பான அலுவல்கள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தினால் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு அல்லது கழிவுத்துண்டு பெறுமதிக்கு விற்பனை செய்து வருமானம் ஒன்றை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வைப்புச் செய்தவர்களை இனங் காண முடியாமல் இருந்த ரூபா 616,934 தொகைக்கான 107 காசோலைகளை இனங் கண்டு உரிய வருமானத்திற்கு எடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொரோனா காலப் பகுதியில் தரவுகள் விண்ணப்பிக்கும் ஆட்களுக்கு நேரடியாக கணக்கில் பணம் வைப்புச் செய்யும்படி அறிவிக்கப்பட்டிருந்ததுடன், பணம் வைப்புச் செய்த பின்னர் குறிப்பிட்ட தகவல்கள் உரிய பிரிவிற்கு வழங்கி தமக்குத் தேவையான தரவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. | பெறுவனவுகள் உறுதிப்படுத்தப்படாத காசோலைகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொத்துவில் வளிமண்டல நிலையங்களை நிறுவுவதற்கு ஜப்பான் சர்வதேச உதவி நிறுவனத்தின் மூலம் 2,503 மில்லியன் ஜப்பான் யென் மானியமொன்று வழங்குவதற்காக 2017 ஜுன் 30 திகதி இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக அரசினால் ரூபா 486.6 மில்லியன் தொகையும் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், 2017 ஆண்டு முதல் இதுவரை 05 வருட காலம் கடந்திருந்த போதிலும், இது வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதம் ஒன்று காணப்பட்ட போதிலும் 2019 ஆண்டு முதல் நிர்மாண வேலைக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் 2020 ஆண்டில் அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் 2021 ஆண்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை போதியளவாக காணப்படாமையால் கேள்வி நடைமுறையை இடைநிறுத்த நேரிட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொத்துவில் ரேடார் கோபுரம் நிர்மாணிக்கப்படும் வளி மண்டலவியல் நிலையம் அமைந்துள்ள காணியும் வளி மண்டலவியல் திணைக்களத்திற்கு இதுவரை உரித்தாக்கி இருக்கவில்லை. | பொத்துவில் அலுவலக நிலப்பரப்பு உரித்தாக்கல் தொடர்பான அலுவல்கள் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், எமது திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு புறம்பான காரணங்களினால் மேலும் தாமதம் அடைந்துள்ளது. | நிலப் பரப்பை வளி மண்டலவியல் திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டிற்கான ‘‘நிகழ்ச்சித் நிரழின்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன், நிலைபேறான அபிவிருத்தி திட்டமுறைசார் செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக திணைக்களம் அறிந்திருந்த போதிலும், அதன்படி திட்டம் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கும், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்கும் முன்னேற்றம், மேற்பார்வை, தொடர் செயல் நடவடிக்கை மற்றும் மீளாய்வு செய்வதன் மூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி குறிப்பிட்ட செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பெற்றுக்கொள்ளும் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங் கண்டிருந்ததுடன், அவ்வவ் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்கும் முன்னேற்றம், மேற்பார்வை, தொடர் செயல் நடவடிக்கை மற்றும் மீளாய்வு அறிவிக்கப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 460 எனினும், உள்ளவாறான பதவியணி 355 ஆக இருந்தமையால் பதவியணி வெற்றிடங்கள் 105 காணப்பட்டன. பல வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்ட 105 பதவிகளும் அத்தியவசியமான பதவிகளாக காணப்பட்டமையால் நிறுவனத்தின் குறிக்கோள் மற்றும் கருமங்களை | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திணைக்கத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய முறையில் நிறைவேற்றுவதற்காக கணிசமான தாக்கம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2013 ஆண்டு முதல் 2019 ஜுலை 01 வரை வெற்றிடமாக காணப்பட்டதுடன், பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட பெண் உத்தியோகத்தர் 2020 ஏப்ரல் 17 திகதி இடமாற்றம் பெற்றுள்ளதுடன், 2021 திசெம்பர் 31 திகதி வரை வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்தின் கடமை தேவைகளை குறிப்பிட்டு பொது நிர்வாகத் திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி 2022.03.22 திகதி முதல் அப் பதவியின் கடமைக்காக பதில் கடமையாற்றுவதற்காக பெண் உத்தியோகத்தர் ஒருவர் இணைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திணைக்களத்திற்காக 2021 ஆண்டிற்குரிய மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்குரிய அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மனிதவள அபிவிருத்தி திட்டம் தாமதம் இன்றி தயாரிக்க வேண்டும். |
| (ஈ) | தேசிய அரச சபை 1975 இன் 1 இலக்கம் கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடும் சட்டத்தின் மற்றும் 1988 இன் 74 இலக்கம் கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடும் (திருத்திய) சட்டத்திற்கு இணங்க திணைக்கள உத்தியோகத்தர்கள் 91 பேரில் 53 பேரினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய அரச சபை 1975 இன் 1 இலக்கம் கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடும் சட்டத்தின் மற்றும் 1988 இன் 74 இலக்கம் கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடும் (திருத்திய) சட்டத்திற்கு இணங்க திணைக்கள உத்தியோகத்தர்கள் 38 பேர் மாத்திரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருந்தனர். | (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் உரிய அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | 2021 ஆண்டின் போது உத்தியோகத்தர்கள் பெற்றிருந்த சம்பளமற்ற விடுமுறைக்கான அறவீடுகள் 2022 ஏப்ரல் 30 திகதி வரை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் இடையிடையே சுழல் அடிப்படையில் கடமைக்கு அழைக்கப்படல் ஆகிய காரணங்களினால் தற்போது 2021 ஆண்டில் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டிருந்த விடுமுறைகள் நாளதுவரை ஆக்கப்படுகின்றன. | சம்பளமற்ற விடுமுறைக்கான அறவீடுகள் தாமதம் இன்றி நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |